முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள்: 09.01.2026 , அ.வ.எண்.48/2012, வா.சா.1 .மஞ்சுளாமணி, க/பெ. ராமராஜ்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 3, 5 , 10 மற்றும் 11 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் எனது தந்தை வாதிக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதி எனது தந்தை என்று எனது பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். வாதி எனது தந்தை என்ற உண்மையை மறைத்து நான் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது பிரமாண பத்திரிக்கையில் எந்த இடத்திலும் வாதி எனது தந்தை என்று குறிப்பிடவில்லை என்றும் அவ்வாறு குறிப்பிட்டுள்ளதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2) நான் எனது அப்பாவிற்காக மட்டும் சாட்சியம் அளிக்க வரவில்லை நான் பொதுவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது தந்தை வழி பாட்டனார் சுப்பையத் தேவருக்கு பாத்தியப்பட்டதாகும். எந்த ஆவணம் வழியாக அவருக்கு பாத்தியப்பட்டது என்றால் அது எனக்கு சரியாக தெரியாது. எனது தாத்தாவிற்கு பின்னிட்டு எனது அப்பாவிற்கு எப்படி வந்தது என்றால் எனது தாத்தா இறந்ததால் வாரிசு என்ற அடிப்படையில் வந்தது. வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் காலியிடத்திற்காக தாக்கல் செய்துள்ளார்கள்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/–( R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி